**மதுரை கூடுதல் தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**பிறப்பிப்பவர்-திரு.தி.குமரன், எம்.காம். எம்.எல்.,**

**சுருக்கம்**

---

பணிக்குழு – தொழிலாளர் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2018-19, 2019-2020 வரையிலான காலத்திற்கு இளநிலை உதவியாளர் பதவிக்குத் தேர்வு செய்யப்பட்டு, தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – விருதுநகர், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அலுவலகத்தில் திரு.ச.குமரகுரு என்பவர் இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டது – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணைகள் வழங்குதல்.

---

**செ.மு.ஆ.எண்.அ / 379 / 2022** **நாள்-22.02.2022**

**படிக்கப்பட்டது**

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண். 2387/PSD-1/2020, நாள் . 28.05.2020.
2. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண். ஜி3/16386/2020-1, நாள்-29.07.2020.
3. விருதுநகர், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) கடித எண். அ/411/2022, நாள்-14.02.2022.

------

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2018-2019 மற்றும் 2019-2020 வரையிலான காலத்திற்கு இளநிலை உதவியாளர் பதவிக்குத் தேர்வு செய்யப்பட்டு, தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 2-ல் காணும் செயல்முறை ஆணையின்படி விருதுநகர், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அலுவலகத்தில் திரு.ச.குமரகுரு என்பவர் இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டு 05.08.2020 அன்று முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார். எனவே அன்னார் இளநிலை உதவியாளர் பதவியில், பணியில் சேர்ந்த நாளான 05.08.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணைகள் வழங்கப்படுகிறது.

,மேற்கண்ட பணியாளர்களது பணிவரன்முறையானது சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளை மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வுகள்-IVல் அடங்கிய தெரிவுகளுக்கெதிராக நிலுவையில் உள்ள ரிட் மனுக்களின் இறுதித் தீர்ப்பிற்குட்பட்டது.

"The regularization is subjet to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the Post included in Combined Civil Services Examination-IV for the year 2018-19 and 2019-2020".

தனியரது தெரிவு உறுதி செய்யப்பட்டது என தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ளதால், மேற்கண்ட நிபந்தனைக்குட்பட்டு இவரது பணிவரன்முறை செய்யப்படுகிறது.

இவர் பணியில் சேர்ந்த நாளான 05.08.2020 முற்பகல் முதல், தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ், இளநிலை உதவியாளர் பதவியில், தகுதிகாண் பருவத்தில் வைக்கப்பட்டு, தொடர்ந்து மூன்றாண்டு காலத்தில், இரண்டாண்டு காலப்பணியினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

மேலும், தனியர் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால், இளநிலை உதவியாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் எனவும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்விலும் தேர்ச்சி பெற்ற பின்னர் தான் தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்யும் முழுத்தகுதியையும் பெறுபவர் ஆவார் என்றும் ஆணையிடப்படுகிறது.

மேலும் இவர் அடுத்த பதவி உயர்விற்கு சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்-1 மற்றும் தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை தேர்வு பகுதி அ மற்றும் ஆ-வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பணிவரன்முறை உத்தரவினை, தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு, தொடர்புடைய அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு : பணிப்பதிவேடு

22/2/22

கூடுதல் தொழிலாளர் ஆணையர்

மதுரை.

22/02/2022

**பெறுநர்**

திரு.ச.குமரகுரு, இளநிலை உதவியாளர்,

தொழிலாளர் உதவி ஆணையர்(அமலாக்கம்) அலுவலகம், விருதுநகர். (உரிய வழியாக)

**நகல்**

1.தொழிலாளர் இணை ஆணையர், மதுரை

2.தொழிலாளர் உதவி ஆணையர்(அமலாக்கம்), விருதுநகர்.